



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 293 16.04.2026 THURSDAY CHITHIRAI: 3 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 293 16.04.2026 வியாழக்கிழமை சித்திரை : 3 விலை : ரூ.5/–


## தென் மாநிலங்களுக்கு மாபெரும் வரலாற்று அநீதி'

# "இன்று கருப்புக்கொடி போராட்டம்!"

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை: ஏப்.16-

"மத்திய அரசு கொண்டுவரவுள்ள தொகுதி மறுவரையறை திருத்த மசோதா, தென்மாநிலங்களுக்கும் இழைக்கப்படும் மாபெரும் வரலாற்று அநீதி. இதற்கு எதிராக, தமிழ்நாடு முழுவதும் வீடுகளிலும், பொது இடங்களிலும் கருப்புக் கொடி ஏற்றும் போராட்டம் இன்று (ஏப்.16) நடக்கும்." என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "இந்தியாவின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட குற்றத்துக்காக தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களுக்குத் தண்டனையா?

ஒன்றிய பாஜக அரசு நாளை நாடாளுமன்றத்தில் கொண்டுவரவுள்ள தொகுதி மறுவரையறை சட்டத் திருத்தம் தமிழ்நாட்டுக்கும், தென் மாநிலங்களுக்கும் இழைக்கப்படும் "மாபெரும் வரலாற்று அநீதி".

விந்திய மலைக்குத் தெற்கே உள்ள தென்னிந்தியர் ஒவ்வொருவரும் கொதித்துப் போயிருக்கிறோம். நெருப்போடு விளையாடுகிறது பாஜக.

தொகுதி மறுவரையறைக்கு எதிராகத் தமிழ்நாடு முழுவதும் வீடுகளிலும், பொது இடங்களிலும் கருப்புக் கொடி ஏற்றும் போராட்டம் நாளை நடக்கும்.

தமிழ்நாட்டின் குரலை மதித்து ஒன்றிய அரசு பின்வாங்கவில்லை என்றால், அதற்கான விளைவுகளை நீங்கள் சந்திக்க வேண்டி இருக்கும். இதற்காக, மிகப் பெரிய விலையை நீங்கள் கொடுக்க வேண்டி இருக்கும்! தி.மு.க. தலைவராக, அனைத்துக்கும் மேல் சுயமரியாதையுள்ள தமிழனாக மீண்டும் எச்சரிக்கிறேன்!" என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பின்னர் மற்றொரு பதிவில், "நாடு முழுக்க உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒருங்கிணைத்து இந்த பேராபத்தை எதிர்கொள்வதற்கான வியூகங்கள் குறித்து திமுக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசித்துள்ளேன்.

தனிப்பட்ட மனிதர்கள் அரசியல் இயக்கங்களைவிட, மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதுதான் நமது தலையாய கடமை. எனவே, அனைத்து அரசியல் இயக்கங்களைச் சார்ந்த தோழர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனநாயகத்தைக் காக்க ஓரணியில் திரள வேண்டும் என அழைக்கிறேன்" என்று முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

## 'மண்ணச்சநல்லூர் பெண் உயிரை மாய்த்துக் கொண்டது உலுக்கவில்லையா?' ஸ்டாலினுக்கு விஜய் கேள்வி

சென்னை: ஏப்.16-

'திமுகவின் 8 ஆயிரம் ரூபாய் கூப்பன் நாடகத்தால், திருச்சி மண்ணச்சநல்லூரில் சகோதரி ஒருவர் தற்கொலை செய்துகொண்டதாக வரும் செய்தி, நெஞ்சைப் பதற வைக்கிறது. திமுகவினரின் ஆபாச வசவுகளைத் தாங்க இயலாமல், மண்ணச்சநல்லூரில் சகோதரி ஒருவர் தன்னுடைய உயிரை மாய்த்துக் கொண்டார் என்கிற செய்தி உங்கள் மனசாட்சியை உலுக்கவில்லையா ஸ்டாலின் சார்?' என தவெக தலைவர் விஜய் கேள்வி எழுப்பியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'மக்களை ஏமாற்றுவதையே தன் வாழ்நாள் கடமையாகக் கொண்டுள்ள திமுக, தற்போதைய தேர்தலிலும் 8000 ரூபாய் கொடுப்பதாகவும், மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு அதைப் பயன்படுத்தி, வீட்டிற்குத் தேவையான பொருள்களை வாங்கிக்கொள்ளலாம் என்றும் கூறி வருகின்றனர்.

இந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் எப்படியும் ஏமாற்றியாவது வெற்றியைப் பெற வேண்டும் என்று குட்டிக்கரணம் போட்டு வரும் திமுகவின் தோல்வி பயத்தின் அறிகுறி தான் எட்டாயிரம் ரூபாய் கூப்பன் அறிவிப்பு.

சாதாரண மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான தேர்தல் என்ன சதுரங்க வேட்டையா? உங்கள் அதிகாரப் பசிக்காக அப்பாவிகளை ஏமாற்றிப் பிழைக்க, இதென்ன இரிடியம் விற்பனையா? மக்களை ஏமாற்றும் மண்ணுளிப் பாம்பா அல்லது வாக்காளர்களை ஏமாற்றும் ரைஸ் புல்லிங்கா இந்த எட்டாயிரம் ரூபாய் கூப்பன்?

இன்று இந்த ஜனநாயக விரோத எட்டாயிரம் ரூபாய் கூப்பன் விநியோகம் செய்யும்போது திமுகவினரின் ஆபாச வசவுகளைத் தாங்க இயலாமல், மன உளைச்சலால் திருச்சி மண்ணச்சநல்லூரில் சகோதரி ஒருவர் தன்னுடைய உயிரை மாய்த்துக்கொண்டார் என்கிற செய்தி உங்கள் மனசாட்சியை உலுக்கவில்லையா ஸ்டாலின் சார்?

இந்தக் கொடூரச் செயலுக்குக் காரணமான கயவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும். அத்தோடு மக்களை ஏமாற்றும் இத்தகைய சதிகாரச் சதுரங்க வேட்டை மோசடிகளைத் தேர்தல் ஆணையம் உடனடியாகத் தலையிட்டு, அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு தடுத்து நிறுத்த வேண்டும்' எனத் தெரிவித்தார்.

## "தொகுதிகள் மறுவரை செய்தால் தென்னிந்தியாவின் பலம் மிக குறையும்" ப.சிதம்பரம் விவரிப்பு

ஈரோடு: ஏப்.16-

ஈரோடு மேற்கு தொகுதி திமுக வேட்பாளரும், அமைச்சருமான சு.முத்துசாமியை ஆதரித்து, காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் மத்திய நிதியமைச்சருமான ப.சிதம்பரம் சூரம்பட்டியில் பிரச்சாரம் மேற்கொண்டார்.



அப்போது அவர் பேசியதாவது: வட இந்தியாவில் பாஜக செல்வாக்கு மிகுந்த கட்சி. நான் மறுக்கவில்லை. ஆனால், அரசியல் சாசனத்தை திருத்தக்கூடாது என்பதற்காக தான் பாஜகவுக்கு வடமாநிலத்தினர் வாக்களித்தனர். எனினும், மூன்றில் இரு பங்கு தரவில்லை. அதனால் அரசியல் சாசனம் பிழைத்தது என நினைத்தோம்.

ஆனால் அரசியல் சாசனத்தை சீரழிக்க விரும்புகிறவர்கள் என்பதை நிருபிக்க நாளை (ஏப்.16) நாடாளுமன்றம் கூடுகிறது. ஐந்து மாநில தேர்தல் நடைபெறும் சமயத்திலே் வேண்டுமென்றே நாடாளுமன்றத்தை கூட்டுகின்றனர்.

இதற்கு காங். மூத்த தலைவர் சோனியா காந்தி, திமுக தலைவர் முதல்வர் ஸ்டாலின் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அந்த கூட்டத்தில் தொகுதிகள் மறுவரை செய்யப்பட உள்ளன. இதில் தென்னிந்தியாவின் பலம் மிக மிக குறையும். வட இந்தியாவின் பலம் கூடும். இது தொடர்பாக பழனிசாமியிடம் கேட்டபோது, 'நான் அமித்ஷாவிடம் கேட்டேன். அவர் பாதகம் வராது என கூறினார். அதனால் தமிழகத்துக்கு பாதகம் வராது' என கூறுகிறார்.

இதற்கு எதற்கு அதிமுக என்ற ஒரு கட்சி. அவர்கள் பெரியார், அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதாவை மறந்துவிட்டனர். பழனிசாமி அடிமை சாசனம் எழுதி கொடுத்துவிட்டார். பொம்மலாட்டத்தில் பழனிசாமி பொம்மை தான். நூலை ஆட்டுபவர் அமித்ஷா தான், என்றார்.



## "ஒரு வார்த்தையாவது பேசினாரா ஸ்டாலின்?" மீஞ்சூர் மாணவி தாக்கப்பட்ட சம்பவத்துக்கு இபிஎஸ் கண்டனம்

சென்னை: ஏப்.16-

மீஞ்சூர் அருகே வீட்டில் தனியாக இருந்த கல்லூரி மாணவி தாக்கப்பட்ட சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ள அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "இத்தனை நாட்கள் தேர்தல் பிரச்சாரம் செய்த ஸ்டாலின், தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பு கேள்விக்குறி ஆகியுள்ளதை பற்றி ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை பேசினாரா?" என்று வினவியுள்ளார்.

இது தொடர்பாக இபிஎஸ் தனது எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் அருகே வீட்டில் தனியாக இருந்த கல்லூரி மாணவியை குறிவைத்து கஞ்சா போதையில் இருந்த இளைஞர்கள் பாலியல் அத்துமீறலில் ஈடுபட முயன்று, பாதிக்கபட்ட மாணவி மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தியதில் மாணவி உயிருக்கு போராடி வருவதாக வரும் செய்தி மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது.

இந்த கொடூரக் குற்றத்தில் ஈடுபட்ட அனைவர் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவல்துறை அதிகாரிகளை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கஞ்சா போதை, பாலியல் வன்கொடுமை, கொலை முயற்சி இது தான் திமுக ஆட்சிக் காலம்.

படிக்கும் கனவுகளோடு இருந்த மாணவியை, ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராட வைத்திருப்பது தான் ஸ்டாலின் மாடல். இந்த மாடல் தான் மீண்டும் வரவேண்டும் என்று ஸ்டாலின் துடித்துக்கொண்டு இருக்கிறார்.

நான் ஒன்றே ஒன்று கேட்கிறேன் இத்தனை நாட்கள் தேர்தல் பிரச்சாரம் செய்த ஸ்டாலின், தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பு கேள்விக்குறி ஆகியுள்ளதை பற்றி ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை பேசினாரா?

தன் ஆட்சிக்கான பொறுப்பு இல்லாத, என்ன நடக்கிறது என்று சிந்தனையே இல்லாத ஒரு டம்மி முதல்வர் தமிழ்நாட்டை ஆண்டது போதும். ஏப்ரல் 23 அன்று நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலுக்கான கேள்வி ஒன்று ஒன்று தான். தமிழகம் வாழ வேண்டுமா? ஆம் என்றால், திமுக வீழ்ந்தே ஆகவேண்டும்!" என்று பதிவிட்டுள்ளார்.

'அடுத்து மலரப்போகும் ஆட்சியில்...'

அதிமுக கூட்டணியில் உள்ள அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "தலைநகர் சென்னை தொடங்கி கடைக்கோடி கிராமங்கள் வரை கட்டுப்படுத்தவே முடியாத அளவிற்கு புரையோடிப் போயிருக்கும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களால் சாலைகள், பேருந்து, ரயில் நிலையங்கள், விமானங்களை தொடர்ந்து தன்னுடைய சொந்த வீட்டில் கூட பாதுகாப்பாக இருக்க முடியாத சூழல் தமிழக மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பள்ளி, கல்லூரி மாணவர்களை குறிவைத்து விற்பனை செய்யப்படும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களால் அவர்களின் எதிர்காலம் வீணாவதோடு, அந்த கொடிய வகைப் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களால் அரங்கேற்றப்படும் கொலை, கொள்ளைகளும், பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்களும் சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளின் அடையாளமாக தமிழகத்தை மாற்றி விட்டன.

எனவே, கல்லூரி மாணவி மீது கண்மூடித்தனமான தாக்குதலில் ஈடுபட்ட அனைவரின் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவல் துறையினரை வலியுறுத்தும் அதே நேரத்தில், தமிழகத்தில் அடுத்து மலரப்போகும் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆட்சி அனைத்து தரப்பு மக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்யும் என்ற உத்தரவாதத்தை மக்களிடம் அளிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.



■ ஈரோடு மாவட்டம், அந்தியூர் மங்களம் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 வாக்குப்பதிவு நாளான 23.04.2026 அன்று வாக்குச்சாவடிகளில் பணியாற்றவுள்ள வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்கள் ஆகியோர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் 2ஆம் கட்ட பயிற்சி வகுப்பினை ஆய்வு மேற்கொண்டு பயிற்சி குறித்து கலந்துரையாடினார்.


விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# தேர்தல் ரீவைண்ட்: 2014ல் தனித்து நின்று கெத்து காட்டிய ஜெயலலிதா!



சென்னை, ஏப்.16-
1972ம் ஆண்டு எம்ஜிஆர் அதிமுகவை தொடங்கி, அவரது மறைவு வரை சட்டப்பேரவை, மக்களவைத் தேர்தல்களை கூட்டணி அமைத்தே சந்தித்தார். அவருக்கு பின் அதிமுக பொதுச் செயலாளராக ஜெயலலிதா பதவியேற்ற பிறகும் சட்டப்பேரவைத் தேர்தல்களில் கூட்டணி வைத்து தேர்தலை எதிர்கொண்டு வந்தார்.

2014ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் அவர் தனித்து போட்டி என்ற அதிரடியான முடிவை எடுத்து, தமிழகம், புதுச்சேரியில் 40 தொகுதி களிலும் வேட்பாளர்களை களம் இறக்கினார். அப்போது, தமிழகம் முழுவதும் அவர் மேற்கொண்ட பிரச்சாரத்தின்போது மோடியா? அல்லது இந்த லேடியா? என்று அவர் வீசிய வார்த்தை அகில இந்திய அளவில் எதிரொலித்தது.

அந்தத் தேர்தலில் அதிமுக 37 தொகுதிகளில் அமோக வெற்றி பெற்று, இந்தியாவின் 3வது பெரிய கட்சியாக நாடாளுமன்றத்தை அலங்கரித்தது.

அந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றிருந்த பாமகவின் அன்புமணி ராமதாஸ் தருமபுரி தொகுதியிலும், பாஜகவின் பொன்.ராதாகிருஷ்ணன் கன்னியாகுமரி தொகுதியிலும் வெற்றி பெற்றனர்.

மேலும், தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் புதுச்சேரியில் போட்டியிட்ட என்.ஆர். காங்கிரஸ் ராதாகிருஷ்ணன் வெற்றி பெற்று, அங்கு மாநிலக் கட்சியில் இருந்து நாடாளு மன்றத்துக்கு தேர்ந் தெடுக்கப்பட்ட முதல் எம்.பி.யானார்.

# இந்திய கடற்படைக்கு 18 அதிநவீன வாட்டர்ஜெட் நார்வே நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்து



புதுடெல்லி, ஏப்.16-
இந்திய கடற்படையின் அடுத்த தலைமுறை ஏவுகணை கப்பல் திட்டத்திற்காக, 18 அதிநவீன 'கமேவா' வாட்டர்ஜெட் உந்துவிசை அமைப்புகளை வழங்குவதற்கான ஒப்பந்தத்தை நார்வேயைச் சேர்ந்த கோங்ஸ்பெர்க் மேரிடைம் நிறுவனம் பெற்றுள்ளது.இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: இந்திய கடற்படைக்கு தேவையான வாட்டர்ஜெட் கருவிகளை வழங்க நார்வே நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.வழக்கமான கப்பல்களில் காணப்படும் விசிறி போன்ற புரொப்பலர் அமைப்பிற்கு மாற்றாக, இந்த வாட்டர்ஜெட் தொழில்நுட்பம் நீரை உள்ளிழுத்து, அதிக வேகத்தில் வெளியேற்றுவதன் மூலம் கப்பலை இயக்கும்.

இதன் மூலம் கப்பல்கள் எதிரிகளின் ரேடார் பார்வையில் படாமல் அதிவேகமாகச் செல்லவும், கடலில் மிக லாவகமாகத் திரும்பவும் முடியும். இந்தக் கப்பல்களைக் கட்டி வரும் கொச்சி கப்பல் கட்டும் தளத்துடன் இணைந்து நார்வே நிறுவனத்துடன் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.இது குறித்து கொச்சி கப்பல் கட்டும் தளத்தின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "ஏற்கனவே பல வர்த்தக ரீதியான திட்டங்களில் இந்நிறுவனம் எங்களுக்கு நம்பகமான கூட்டாளியாக இருந்துள்ளது. இந்த முக்கியத் திட்டத்திற்குத் தேவையான தரமான மற்றும் நுணுக்கமான தொழில் நுட்பக் கருவிகளை அவர்கள் வழங்குவார்கள் என எதிர்பார்க்கிறோம்" என்றார்.

# சத்தீஸ்கரில் பாய்லர் வெடித்து 10 பேர் உயிரிழப்பு: 40க்கும் மேற்பட்டோர் படுகாயம்



சக்தி, ஏப்.16-
சத்தீஸ்கர் மாநிலம் சக்தி மாவட்டத்தில் வேதாந்தா குழுமத்துக்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு, நேற்று மதியம் சுமார் 2 மணியளவில் தொழிலாளர்கள் தங்களது வழக்கமான பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அங்குள்ள பெரிய பாய்லர் ஒன்று எதிர்பாராத விதமாகப் பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. இந்த விபத்தைத் தொடர்ந்து ஆலை வளாகம் முழுவதும் அடர்ந்த புகை மூட்டம் சூழ்ந்ததால் தொழிலாளர்கள் உயிருக்குப் பயந்து அலறியடித்துக் கொண்டு ஓடினர்.முதற்கட்ட தகவல்களின்படி, இந்த விபத்தில் 10 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக கூறப்படுகிறது. மேலும் 40க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 18 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக கூறப்படுவதால் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. விபத்து குறித்த தகவல் அறிந்ததும் போலீஸார், தீயணைப்புப் படையினர் மற்றும் மருத்துவக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். பாய்லர் வெடித்ததற்கான துல்லியமான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. இருப்பினும், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த விபத்து நேரிட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இது குறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பாகிஸ்தான் மருத்துவமனையில் ஊசியை மீண்டும் பயன்படுத்தியதால் 331 குழந்தைகளுக்கு எச்ஐவி தொற்று




இஸ்லாமாபாத், ஏப்.16-
பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலம் தவுன்சா நகரில் அரசு வட்டார மருத்துவமனை உள்ளது. இதில் 'பிபிசி நியூஸ்' நடத்திய ஒரு ரகசிய ஆய்வில் குழந்தைகளுக்கு ஊசிகளை மீண்டும் மீண்டும் பயன்படுத்துதல், ஒரே மருத்துவ சாதனத்தை பல நோயாளிகளுக்கு பயன்படுத்துதல் என பல்வேறு பாதுகாப்பற்ற நடைமுறைகளை அம்பலப்படுத்தியுள்ளது. இதுவே எச்ஐவி பரவலுக்கும் வழிவகுத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

தவுன்சாவில் 8 வயது சிறுவன் எச்ஐவி தொற்று உறுதி செய்யப்பட்ட சிறிது நேரத்திலேயே உயிரிழந்தான். இறுதி நாட்களில், அவன் அனுபவித்த தீவிர துன்பத்தை சிறுவனின் தாயார் நினைவு கூர்ந்தார். சிறுவனுக்கு எச்ஐவி இருப்பது கண்டறியப்பட்ட சிறிது காலத்திலேயே, அவன் சகோதரி அஸ்மாவுக்கும் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இந்த மருத்துவமனையில் வழக்கமான சிகிச்சையின் போது செலுத்தப்பட்ட அசுத்தமான ஊசிகள் மூலம் இரு குழந்தைகளுக்கும் வைரஸ் தொற்று ஏற்பட்டதாக அவர்களது குடும்பத்தினர் நம்புகின்றனர்.2024ம் ஆண்டின் பிற்பகுதியில், உள்ளூர் மருத்துவர் குல் கைஸ் ரானி தனது மருத்துவமனைக்கு வரும் குழந்தைகளிடையே எச்ஐவி பாதிப்புகள் வழக்கத்துக்கு மாறாக அதிகரித்ததை கவனித்தபோது இந்த தொற்றுப் பரவல் முதன்முதலில் வெளிச்சத்துக்கு வந்தது.

பிபிசி நடத்திய புலனாய்வில் 2024 நவம்பர் முதல் 2025 அக்டோபர் வரையிலான காலகட்டத்தில், தவுன்சாவில் குறைந்தது 331 குழந்தைகளுக்கு எச்ஐவி தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இந்தத் தொற்றுகளில் பல பாதுகாப்பற்ற ஊசி போடும் முறைகளுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்று சான்றுகள் தெரிவிக்கின்றன. இதனிடையே, தங்கள் மீதான புகார்களை மருத்துவமனை அதிகாரிகள் மறுத்துள்ளனர்

# 150 கி.மீ தூரத்திலிருந்து தாமிரபரணி நீர் வருங்கால சந்ததிக்கான வாழ்வாதாரத் திட்டம் வேட்பாளர் அப்பாவு உறுதி



திசையன்விளை ஏப். 16-
ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் சபாநாயகர் மு. அப்பாவு, திசையன்விளை சுற்றுவட்டாரப் பகுதிகளான உறுமன்குளம், குமாரபுரம், இடையன்குடி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட பஞ்சாயத்துகளில் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.பிரச்சாரத்தின் போது பேசிய சபாநாயகர் அப்பாவு, தொகுதியில் நிறைவேற்றப்பட்ட முக்கியத் திட்டங்களைப் பட்டியலிட்டார்: ஒரு ரூபாய் கூட செலவில்லாமல், 150 கிலோமீட்டர் தூரத்திலிருந்து தாமிரபரணி ஆற்றின் நீரைக் கொண்டு வந்து, தொகுதியிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இடையன்குடி உருமன்குளம் சாலையில் ₹7 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் மற்றும் குமாரபுரத்தில் ₹1.50 கோடி மதிப்பீட்டில் விவசாயிகளுக்காக 200 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக ராதாபுரம் தொகுதியில் உள்ள 306 கல்வி நிலையங்களில் ₹6.12 கோடி மதிப்பீட்டில் 'ஸ்மார்ட் கிளாஸ்' (அறிவுத்திறன் வகுப்பறை) அமைக்கப்பட்டுள்ளது.

தமிழின் தொன்மையை உலகிற்கு நிலைநாட்டிய கால்டுவெல் வாழ்ந்த இடையன்குடி இல்லத்தை ₹2 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்துக் கொடுத்த முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று உணர்ச்சிப்பூர்வமாகப் பேசினார். இறுதியாக உதயசூரியன் சின்னத்திற்கு அமோக ஆதரவு திரட்டினார்.

பிரச்சாரத்தின் போது ராதாபுரம் சட்டமன்ற தொகுதி திமுக பார்வையாளரும் மாவட்ட பஞ்சாயத்து தலைவருமான வி.எஸ். ஆர்.ஜெகதீஷ், ராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, தேமுதிக மாவட்ட செயலாளர் விஜி வேலாயுதம், மதிமுக மாவட்ட செயலாளர் ரைமன்ட், விடுதலை சிறுத்தை கட்சி மாவட்ட செயலாளர் அருள்செல்வன், காங்கிரஸ் வட்டாரத் தலைவர் அந்தோணிராஜ், பஞ்சாயத்து தலைவர்கள் பொன் இசக்கி, அனிதா பிரின்ஸ், சாந்தா மகேஸ்வரன், ஜேகர், பஞ்சவர்ணம், வாழவந்தகணபதி, பேபி முருகன், கந்தசாமி மணிகண்டன் உட்பட கலந்து கொண்டனர்.



## சாத்தூர் அருகே ஆம்னி பஸ் பைக் மோதல்

# பிளஸ் 2 மாணவர்கள் 3 பேர் பலி: நள்ளிரவில் டீ குடிக்க சென்றபோது சோகம்

சாத்தூர், ஏப்.16-
சாத்தூர் அருகே, நேற்று நள்ளிரவு ஆம்னி பஸ் பைக் மோதிய விபத்தில் பிளஸ் 2 மாணவர்கள் 3 பேர் பரிதாபமாக பலியாகினர். இந்த சம்பவம் உறவினர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே உள்ள பேர்நாயக்கன்பட்டியை சேர்ந்தவர் செல்வம் மகன் கோகுல் (17). இவர், சிவகாசியில் உள்ள தனியார் மெட்ரிக் பள்ளியில் பிளஸ் 2 படித்து பொதுத்தேர்வு எழுதி முடிவுக்காக காத்திருந்தார். இந்நிலையில், கோகுலின் செல்போன் பழுதானதால், அதனை சரிபார்ப்பதற்காக உறவினரின் பைக்கில் நேற்று பிற்பகல் சிவகாசிக்கு சென்றார். அங்கு செல்போன் கடையில் பழுது நீக்க தனது போனை கொடுத்தார். கடைக்காரர், செல்போன் பழுதை சரிசெய்ய அதிக நேரமாகும் என கூறியதால், கோகுல் அங்கிருந்து புறப்பட்டு சிவகாசியில் தன்னுடன் படித்த வகுப்பு தோழர்கள் சீனிவாசன் மகன் பிரசன்னா (17) மற்றும் யுவராஜ் (17) ஆகியோரை சந்தித்தார். பின்னர், கோகுல் தனது நண்பர்களுடன் இரவு 9 மணியளவில் செல்போன் கடைக்குச் சென்று, பழுது நீக்கிய செல்போனை பெற்று கொண்டார். இதையடுத்து நண்பர்கள் மூவரும் நீண்ட நேரம் பேசி கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. பின்னர் நள்ளிரவு 11.45 மணியளவில் டீ குடிப்பதற்காக ஒரே பைக்கில் 3 பேரும், சாத்தூர் கோவில்பட்டி நான்கு வழிசாலையில் சென்று கொண்டிருந்தனர். போக்குவரத்து நகர் அடுத்த காட்டுபள்ளிவாசல் பகுதியில் எதிரே வந்த தனியார் ஆம்னி பஸ், பைக் மீது மோதியது.

இதில் தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்த மாணவர்கள் 3 பேரும் சம்பவ இடத்திலேயே அடுத்தடுத்து உயிரிழந்தனர். தகவலறிந்து சாத்தூர் தாலுகா போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். இறந்த 3 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். விபத்து குறித்து தகவல் அறிந்த 3 மாணவர்களின் பெற்றோரும், உறவினர்களும் சாத்தூர் மருத்துவமனையில் குவிந்து கதறி அழுதது காண்போரை கண்கலங்க செய்தது. டூவீலர் மீது ஆம்னிபஸ் மோதி பிளஸ் 2 மாணவர்கள் 3 பேர் பலியான சம்பவம் உறவினர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



# இந்தியாவை ஒரே ஒரு மத அடையாளத்திற்குள் அடக்க முடியாது

## உச்சநீதிமன்ற நீதிபதி கோட்டீஸ்வர் சிங் கருத்து

டெல்லி, ஏப்.16-
21 ஆம் நூற்றாண்டில் சட்டம் மற்றும் நீதியை மறுபரிசீலனை செய்தல்: சவால்கள், பொறுப்புக்கூறல் மற்றும் சீர்திருத்தம்" என்ற கருப்பொருளில் நடைபெற்ற தேசிய சட்ட நிறுவனம் பல்கலைக்கழக மாணவர் வழக்கறிஞர் சங்கத்தின் (NLIU-SBA) சட்ட மாநாடு 2026ல் உச்ச நீதிமன்ற நீதிபதி கோடீஸ்வர் சிங் உரையாற்றினார்.அப்போது அவர் கூறியதாவது.

இந்தியாவை ஒரே ஒரு மத அடையாளத்திற்குள் அடக்க முடியாது. இந்தியாவைப் போல அனைத்து மதங்களையும் பின்பற்றும் நாடுகள் மிகச் சிலவே உள்ளன. இந்தியா தன்னை ஒருபோதும் இந்து நாடாக அறிவித்துக் கொண்டதில்லை. இந்து என்ற வார்த்தைக்கு எந்த அர்த்தமும் இல்லை. 'இந்து' என்ற சொல்லே, சிந்து நதிக்கு அப்பால் வசிக்கும் மக்களைக் குறிக்க, வெளிநாட்டினரால் நமக்கு வழங்கப்பட்ட ஒரு சொல்லாகும்.இந்திய செய்திகள்எனவே, என் புரிதலைப் பொறுத்தவரை, 'இந்துக்கள் என்றால் என்ன?' என்ற கேள்விக்கு எந்த அர்த்தமும் இல்லை. என்னுடன் உடன்படாதவர்கள் இருக்கலாம், ஆனால் 'இந்து' என்ற சொல் எதையும் குறிக்கவில்லை. 'இந்து' என்பவர்கள் சிந்து நதிக்கு அப்பால் வசிப்பவர்கள் மட்டுமே.

அரசியலமைப்புச் சட்டமானது, இந்தியாவின் சுதந்திர கால தொலைநோக்கையும் இலட்சியங்களையும் வரையறுத்ததுடன், நாட்டின் எதிர்காலத்தையும் தொடர்ந்து வடிவமைத்து வருகிறது

# சிபிஎஸ்இ 10ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியானது

டெல்லி, ஏப்.16-
25 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் எழுதிய சிபிஎஸ்இ 10ம் வகுப்பு தேர்வு (Session 1) முடிவுகள் வெளியானது. நாடு முழுவதும் சிபிஎஸ்இ 10ஆம் வகுப்பு தேர்வுகள் பிப்.17இல் தொடங்கி மார்ச் 11 வரை நடைபெற்றது. cbse.gov.in, results.cbse.nic.in ஆகிய இணையதளங்களில் தேர்வு முடிவுகளை தெரிந்து கொள்ளலாம். அதிகாரபூர்வ இணையதளங்களில் ஏற்படும் நெரிசலை தவிர்க்க டிஜிலாக்கர் மூலம் முடிவுகளை பார்வையிடலாம்

# சேலம் வடக்கு தொகுதி பாமக வேட்பாளர் சதாசிவத்திற்குச் சேலம் மாவட்ட செல்லர்ஸ் அசோசியேஷன் முழு ஆதரவு



சேலம் ஏப். 16-
சேலம் மாவட்ட வடக்கு தொகுதி தேசிய ஜனநாயக முற்போக்கு கூட்டணி (அதிமுக பாமக கூட்டணி) வேட்பாளர் சதாசிவம் அவர்களை, சேலம் மாவட்ட செல்லர்ஸ் அசோசியேஷன் தலைவர் அக்னிராம் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்துத் தங்களது முழுமையான ஆதரவைத் தெரிவித்தனர்.திமுக மீது குற்றச்சாட்டு:இந்தச் சந்திப்பின் போது பேசிய நிர்வாகிகள், "கடந்த ஐந்தாண்டுகளாக திமுக ஆட்சியில் ரேஷன் கடை மற்றும் சத்துணவு உதவியாளர் பணியிடங்களில் இஸ்லாமியர்களுக்கு முறையான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. இஸ்லாமிய மக்களுக்கு எந்தவொரு உருப்படியான நலத்திட்டமும் சென்றடையவில்லை" எனக் குற்றம் சாட்டினர்.

கோரிக்கைகளும் வாக்குறுதிகளும்: கோட்டையிலிருந்து பொன்னம்மாபேட்டை வரை வசிக்கும் சுமார் 35,000 இஸ்லாமியர்களின் அடிப்படை வசதிகள், குடிநீர், சாலை மற்றும் பாதாளச்சாக்கடை வசதிகளை மேம்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

மேலும், ₹20,000க்கு கீழ் வருமானம் ஈட்டும் இஸ்லாமியர்களுக்குத் தொழில் தொடங்க ₹2 லட்சம் கடன் வசதியை மானியத்துடன் பெற்றுத் தருவதாக வேட்பாளர் உறுதியளித்தார். வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் எடப்பாடி பழனிசாமி அவர்கள் மீண்டும் முதல்வராக முழு ஆதரவு அளிப்போம்" என அவர்கள் உறுதி பூண்டனர். பங்கேற்றோர்:இந்நிகழ்வில் சேலம் மாவட்ட செல்லர்ஸ் அசோசியேஷன் நிர்வாகிகள், சேலம் இஸ்லாமிய நலச்சங்க நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சித் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

**சினிமா ஸ்பெஷல்** | **சர்வதேச விருது பெற்ற 'பனையேறி' கூட்டணியின் மற்றொரு மைல்கல்**

# ‘தமிழினி’ திரைப்பட போஸ்டர் சொல்லும் சேதி என்ன?

துபாயில் நடைபெற்ற சர்வதேசக் குறும்படப் போட்டியில் 300க்கும் மேற்பட்ட படங்களை முறியடித்து, இயக்குனர் ஆட்டோகிராப் சேரன் மற்றும் மாநாடு வணங்கான் திரைப்படப் புகழ் இயக்குனர் தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி, இவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல் பரிசினை வென்ற 'பனையேறி' குறும்படத்தின் வெற்றியினைத் தொடர்ந்து, அதே கூட்டணி இப்போது வெள்ளித்திரையில் கால் பதிக்கிறது.

திசையன்விளையைச் சேர்ந்த பிரபல தயாரிப்பாளர் டி.பி. சரவணன் தயாரிப்பில், இயக்குநர் கணேஷ் மூர்த்தி இயக்கத்தில் 'தமிழினி' என்ற புதிய திரைப்படம் மிகப்பிரம்மாண்டமாக உருவாகி வெண் திரையில் வெளிவர காத்துக் கொண்டிருக்கிறது. சர்வதேச அளவில் கவனம் ஈர்த்த இக்கூட்டணி மீண்டும் இணைந்திருப்பது திரையுலகினரிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. *இந்தப் போஸ்டர் சொல்லும் செய்திகள் இதோ:**உண்மைச் சம்பவங்களின் தொகுப்பு?:*போஸ்டரின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள உண்மைச் சம்பவங்களின் அடிப்படையில் என்ற வாசகம், இது வெறும் கற்பனை கதையல்ல, நம் மண்ணில் நடந்த அல்லது நடந்து கொண்டிருக்கும் ஒரு யதார்த்தமான பதிவு என்பதை உணர்த்துகிறது.*கால மாற்றமும் குறியீடுகளும்:*போஸ்டரின் பின்னணியில் உள்ள சுவரில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் மற்றும் விஜய்




ஆகியோரின் புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன. இது மூன்று வெவ்வேறு தலைமுறைகளின் தாக்கம் அல்லது அந்தச் சித்தாந்தங்களின் பின்னணியில் இந்தக் குடும்பத்தின் கதை நகர்வதைக் காட்டுகிறது.

*எதார்த்தமான குடும்பச் சூழல்:*இந்தப் படம் முழுக்க முழுக்கக் கடல் சார்ந்த மீனவ மக்களின் அன்றாட வாழ்க்கை, அவர்கள் சந்திக்கும் சவால்கள் மற்றும் ஆழ்கடல் அரசியலைப் பிரதிபலிக்கும் வகையில் அமைய உள்ளது. பனையேறி குறும்படத்தில் விளிம்பு நிலை மக்களின் வலிகளைப் பதிவு செய்தது போலவே, 'தமிழினி'யிலும் மீனவர்களின் எதார்த்தமான வாழ்வை இயக்குநர் படமாக்கியுள்ளதாகத் தெரிகிறது. ஒரு நடுத்தர வர்க்கக் குடும்பத்தின் குழுப் புகைப்படம் போன்ற தோற்றம், இந்தக் கதை குடும்ப உறவுகளையும், அவர்களுக்குள் இருக்கும் பாசப் போராட்டங்களையும் மையமாக வைத்திருக்கும் என்பதைச் சொல்கிறது. இதில் இடம்பெற்றுள்ள பாத்திரங்களின் தோற்றம் மிக எதார்த்தமாக வடிவமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.*நட்சத்திரப் பட்டாளம்:*இப்படத்தில் தீபா சங்கர், பெஞ்சமின், வின்சென்ட் ராய் ஆகியோர் முக்கியப் பாத்திரங்களில் நடிக்கின்றனர். விஜே ஆசிக் மற்றும் பிரதீப் ராஜ் கதாநாயகர்களாகவும், ஷாஷா சிவகுமார் மற்றும் புஷ்பலதா கதாநாயகிகளாகவும், தயாரிப்பாளர் டி.பி. சரவணன் இப்படத்தில் ஒரு சுவாரஸ்யமான நகைச்சுவைக் கதாபாத்திரத்தில் தோன்றுவது குறிப்பிடத்தக்கது.*சக்கர வியூகம்:* "மண்ணின் மணம் வீசும் படைப்பு!" திசையன்விளை போன்ற ஒரு சிறிய நகரிலிருந்து சர்வதேச விருது வரை சென்ற டி.பி. சரவணன் கணேஷ் மூர்த்தி கூட்டணி, இப்போது மீனவர்களின் வலிகளைப் பேச முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது. தென் தமிழகக் கடலோரப் பகுதிகளின் எதார்த்தத்தைச் சொல்லும் இந்தப் படைப்பு, பெரிய வரவேற்பைப் பெறும். குறிப்பாகத் தென் தமிழகத்தின் வாழ்வியலைப் பேசும் படங்களுக்கு இப்போது நல்ல வரவேற்பு உள்ள நிலையில், 'தமிழினி' திரைப்படம் ஒரு முக்கியமான இடத்தைப் பிடிக்கும் எனத் தெரிகிறது.

## மும்பை இசை நிகழ்ச்சியில் போதைப்பொருள் உட்கொண்ட 2 மாணவர்கள் உயிரிழப்பு

மும்பை, ஏப்.16-

மும்பையில் உள்ள நெஸ்கோ மையத்தில் கடந்த 11ம் தேதி இரவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ரூ.2,000 நுழைவுக் கட்டணம் செலுத்தி சுமார் 4,000 பேர் கலந்து கொண்டனர்.

இதில் கலந்துகொண்ட சிலர் தடை செய்யப்பட்ட எம்டிஎம்ஏ போதைப் பொருளை உட்கொண்டதாக கூறப்படுகிறது, இதனால் இரவு 12 மணியளவில், 3 மாணவர்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் 24 வயது பெண்ணும் 28 வயது ஆணும் மருத்துவமனையில் உயிரிழந்தனர். 25 வயது பெண் கவலைக்கிடமான நிலையில் உள்ளார்.





இதுகுறித்து மும்பை போலீஸார் கூறுகையில், “இறந்த மாணவர்களில் ஒருவர் நிகழ்ச்சிக்கு செல்லும் வழியில் டாக்ஸிக்குள் ஒரு மாத்திரையும் நிகழ்ச்சியில் இரண்டாவது மாத்திரையும் உட்கொண்டுள்ளார். இது போதைப் பொருள் அதிகமாவதற்கு வழிவகுத்தது. அதிக போதைப்பொருளை உட்கொண்டதே மரணத்துக்கு காரணம் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இவர்களுக்கு மாத்திரைகளை வழங்கிய மற்றொரு மாணவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 67 மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன” என்றனர்.

மும்பைக்கு வெளியிலிருந்து இந்த மாத்திரைகள் கொண்டு வரப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் ஆகாஷ் சமல், நெஸ்கோ ஊழியர் சன்னி வினோத் ஜெயின், உள் பாதுகாப்பு குழு உறுப்பினர் பால கிருஷ்ணன் பலராம் மற்றும் இரு மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் நடனமாடும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

நெஸ்கோ மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “விசாரணையில் அதிகாரிகளுக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறோம். உண்மைகள் விரைவில் கண்டறியப்படுவதை உறுதி செய்திட அனைத்து தகவல்கள் மற்றும் உதவிகளை வழங்கி வருகிறோம்” என்று கூறிள்ளது.

## ஏழுமலையான் கோயிலில் மே 1 முதல் விஜபி பிரேக் தரிசனத்தை ரத்து செய்ய ஆலோசனை

திருமலை, ஏப்.16-

கோடை காலத்தில் திருப்பதி ஏழுமலையான் கோயிலில் பக்தர்களின் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.இதனால் வரும் மே 1ம் தேதி முதல் ஜூன் மாதம் 30ம் தேதி வரை தொடர்ந்து 2 மாதங்களுக்கு விஜபி பிரேக் தரிசனம் மற்றும் ஸ்லாட்டட் சர்வ தரிசனம் (எஸ் எஸ்டி) அதாவது சர்வ தரிசனத்திற்கு திருப்பதியில் டோக்கன் வழங்குதலை நிறுத்த தேவஸ்தானம் திட்டமிட்டுள்ளது. இதனால் முன்கூட்டியே சர்வ தரிசன டோக்கன்கள் வழங்காமல், நேரடியாக சர்வ தரிசன முறையை அமல்படுத்த உள்ளது. இதனால் கடந்த 3 ஆண்டுகளில் கோடை விடுமுறையில் அமல்படுத்திய



முறைகளை தேவஸ்தானம் ஆய்வு செய்து வருகிறது. அதன்படி கடந்த 3 ஆண்டுகளில் கோடை விடுறையில், அதாவது மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் மட்டும் சராசரியாக 23 24 லட்சம் பக்தர்கள் சுவாமியை தரிசித்துள்ளனர்.தற்போது விஜபி பிரேக் தரிசனத்திற்காக தினமும் 2 முதல் 3 மணி நேரம் ஒதுக்கப்படுகிறது. இதன் மூலம் 3,800 பக்தர்கள் சுவாமியை தரிசிக்கின்றனர். இதை ரத்து செய்வதன் மூலம் 15 ஆயிரம் பக்தர்கள் தர்ம தரிசனம் மூலம் சுவாமியை தரிசனம் செய்யலாம். இதனால் கோடையில் விஜபி பிரேக் தரிசனத்தை ரத்து செய்வது பற்றி தேவஸ்தானம் ஆலோசித்து வருகிறது.



## மேற்கு வங்கத் தேர்தலில் 2,926 வேட்பாளர்கள் போட்டி

கொல்கத்தா, ஏப்.16-

மேற்கு வங்கத்தில் ஏப்ரல் 23 மற்றும் 29 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. தேர்தல் முடிவுகள் மே 4ம் தேதி அறிவிக்கப்பட உள்ளது. இந்நிலையில், முதல்கட்ட தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் நடைமுறைகள் ஏற்கெனவே முடிவடைந்தது.இதையடுத்து, இரண்டாம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்ய ஏப்ரல் 9 கடைசி நாளாக இருந்தது. ஏப்ரல் 10ம் தேதி மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டன. வேட்பு மனுக்களைத் திரும்பப் பெற ஏப்ரல் 13, பிற்பகல் 3:00 மணி வரை அவகாசம் வழங்கப்பட்டது. இதையடுத்து, இரண்டாம் கட்ட தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, முதற்கட்ட தேர்தல் நடைபெறும் 152 தொகுதிகளில் 1,478 வேட்பாளர்கள், 2ம் கட்ட தேர்தல் நடைபெறும் 142 தொகுதிகளில் 1,448 வேட்பாளர்கள் என மொத்தம் 2,926 பேர் போட்டியிடுகின்றனர்.

## ரயில் முன் பாய்ந்து தேர்தல் அதிகாரி தற்கொலை

வலசாட், ஏப்.16-

குஜராத் மாநிலத்தில் உள்ளாட்சித் தேர்தல் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில் தேர்தல் அதிகாரி ஒருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. குஜராத் மாநிலம் வலசாட் மாவட்டத்திற்கு உட்பட்ட உமர்காவ் பகுதி தேர்தல் அதிகாரியாக டி.சி. பிராமண்கட்ச் பணியாற்றி வந்தார். அங்கு உள்ளாட்சித் தேர்தல் நடைபெற இன்னும் இரண்டு வாரங்களே உள்ள நிலையில், தேர்தல் ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வந்தன.இந்நிலையில், நேற்று நள்ளிரவு பிராமண்கட்ச்அந்தப் பகுதியில் வந்த ரயிலின் முன் திடீரென பாய்ந்தார். இதில் அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். நள்ளிரவு நேரத்தில் இந்த விபத்து குறித்து தகவல் அறிந்ததும், சம்பவ இடத்திற்கு ஏராளமான போலீசார் விரைந்து சென்று பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். தொடர்ந்து ரயில்வே போலீசார் அவரது உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இதுகுறித்து ரயில்வே போலீசார் கூறுகையில், ‘இது தற்கொலை வழக்கு என்பது உறுதியாகியுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பாக அனைத்து கோணங்களிலும் தீவிர விசாரணை நடத்தி வருகிறோம்’ என்று தெரிவித்தனர். முதற்கட்ட விசாரணையில் அவர் தற்கொலை செய்துகொண்டதற்கான சரியான காரணங்கள் இதுவரை தெரியவில்லை. தேர்தல் நெருங்கும் வேளையில் அரசு அதிகாரி உயிரிழந்த சம்பவம் அந்தப் பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.



## சென்னையில் உள்ள 16 தொகுதிகளிலும் தபால் வாக்குகள் செலுத்தும் பணி தொடங்கியது!

சென்னை, ஏப்.16-

சென்னையில் உள்ள 16 தொகுதிகளிலும் தபால் வாக்குகள் செலுத்தும் பணி தொடங்கி நடந்து வருகிறது. தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் தபால் வாக்குகளை செலுத்தி வருகின்றனர். தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி மையத்தில் தபால் வாக்கு மையம் அமைக்கப்பட்டுள்ளது

## ‘கச்சா எண்ணெய் விலை 130 டாலராக அதிகரித்தால் இந்தியப் பொருளாதார வளர்ச்சி 0.8% வரை குறையும்’

புதுடெல்லி, ஏப்.16-

இந்த ஆண்டில் கச்சா எண்ணெயின் சராசரி விலை ஒரு பேரலுக்கு 130 டாலராக உயர்ந்தால் இந்தியப் பொருளாதார வளர்ச்சி 0.8% வரை குறையும் என எஸ் அண்ட் பி குளோபல் ரேட்டிங்ஸ் தெரிவித்துள்ளது.எஸ் அண்ட் பி குளோபல் ரேட்டிங்ஸ் நிறுவனம் வெளியிட்ட ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்தியாவின் வலுவான மேக்ரோ பொருளாதார மற்றும் நிதித்துறை அடிப்படைகள், நீடித்த கச்சா எண்ணெய் விலை அதிர்ச்சியின் தாக்கத்தைத் தாங்கும் வாய்ப்புள்ளது. இருப்பினும், 2026ம் ஆண்டில் கச்சா எண்ணெயின் சராசரி விலை ஒரு பேரலுக்கு 130 டாலராக உயர்ந்தால் இந்திய பொருளாதார வளர்ச்சி 0.8% வரை குறையக் கூடும்.



அதன் அழுத்த சூழ்நிலையின் கீழ், வட்டி, வரி, தேய்மானம் மற்றும் கடன் தள்ளுபடிக்கு முன்னதான கார்ப்பரேட் வருவாய், 2027 நிதியாண்டில் 1525% குறையக்கூடும். மேலும் கடன் விகிதம் 0.5 முதல் 1 மடங்கு வரை உயரக்கூடும். அதேநேரம் வங்கித் துறையின் சொத்து தரம் பலவீனமடைந்து, வாராக்கடன்கள் சுமார் 3.5% வரை அதிகரிக்கக் கூடும்.மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போரால் ஏற்படும் அதிர்ச்சிகளில் இருந்து இந்தியா தப்பிக்க முடியாது. எரிபொருள் விலை உயர்வு மற்றும் விநியோகத் தடைகளின் வேதனை மாதக்கணக்கில் நீடிக்கலாம். இது குடும்பங்கள், நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் பொருளாதார நடவடிக்கைகளைக் குறைக்கும்.

எனினும், நிறுவனங்களின் வலுவான இருப்புநிலைக் குறிப்புகள், போதுமான மூலதனம் கொண்ட வங்கிகள் மற்றும் மீள்திறன் கொண்ட வெளிப்புற நிலை ஆகியவை பாதிப்புகளுக்கு எதிராக பாதுகாப்பை வழங்குகின்றன.எஸ் அண்ட் பி குளோபல் ரேட்டிங்ஸ், அழுத்த நிலையில் 2026ல் பிரெண்ட் கச்சா எண்ணெய் ஒரு பேரலுக்கு 130 டாலராகவும், 2027ல் 100 டாலராகவும் இருக்கும் என்று கருதுகிறது (சாதாரண நிலையில் முறையே 85 மற்றும் 70 டாலர்). இந்தியாவின் இறையாண்மை மதிப்பீட்டில் உடனடி தாக்கம் எதையும் அது எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் நிதி ஒருங்கிணைப்பு முயற்சிகள் தற்காலிக பின்னடைவைச் சந்திக்கக் கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நொய்டாவில் போராடிய தொழிலாளர் ஊதியம் 21% வரை உயர்வு

புதுடெல்லி, ஏப்.16-

நொய்டாவில் தொழிலாளர்களின் வன்முறை போராட்டத்தை தொடர்ந்து, குறைந்தபட்ச ஊதியத்தில் 21% வரை இடைக்கால உயர்வை உ.பி. அரசுஅறிவித்துள்ளது. உ.பி.யின் கவுதம புத்தர் நகர் மாவட்டத்தில் உள்ள நொய்டாவில் தொழிற்சாலை ஊழியர்கள் கடந்த சில நாட்களாக ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வந்தனர்.அண்டை மாநிலமான ஹரியானாவில் குறைந்தபட்ச ஊதியம் 35% உயர்த்தப்பட்டதை தொடர்ந்து அதுபோன்று உ.பி.யிலும் உயர்த்தக் கோரி இவர்கள் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டம் கலவரமாக மாறியது. இதுதொடர்பாக பலர் கைது செய்யப்பட்டனர். இதுகுறித்து உ.பி. அரசு நேற்று வெளியிட்டுள்ள



அறிக்கையில் கூறியிருப்பதாவது: தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தில் இடைக்கால உயர்வை அமல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

அடுத்த மாதம் அரசால் அமைக்கப்படும் ஊதிய வாரியத்தின் பரிந்துரைக்கு பிறகு, நிரந்தர குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்படும். ஏப்ரல் 1 முதல் மாநிலம் முழுவதும் அன்ஸ்கில்டு தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியத்தை 21% வரை அரசு உயர்த்தியுள்ளது. இந்த உயர்வு,

நொய்டா மற்றும் காசியாபாத்தில் 21% ஆகவும் நகராட்சி, மாநகராட்சி பகுதிகளில் 15% ஆகவும் மற்ற இடங்களில் 9% ஆகவும் இருக்கும். உதாரணமாக, உ.பி.யில் அன்ஸ்கில்டு தொழிலாளர்கள் தற்போது மாதத்திற்கு ரூ.11,313 பெறுகின்றனர். இது நொய்டா, காசியாபாத்தில் ரூ.13,690 ஆக உயரும். நகராட்சி, மாநகராட்சி பகுதிகளில் ரூ.13,006 ஆகவும் மாநிலத்தின் பிற பகுதிகளில் ரூ.12,356 ஆகவும் உயரும். இதுபோல் நொய்டா மற்றும் காசியாபாத்தில் செமி ஸ்கில்டு தொழிலாளர்களுக்கு மாத ஊதியம் ரூ.12,445ல் இருந்து ரூ.15,059 ஆகவும் ஸ்கில்டு தொழிலாளர்களுக்கு ரூ.13,940ல் இருந்து ரூ.16,669 ஆகவும் உயரும். தொழிலாளர்களுக்கு விதிகளின்படி மாதாந்திர ஊதியம், கூடுதல்நேரப் பணிக்கான ஊதியம், வாராந்திர விடுமுறை, போனஸ், சமூக பாதுகாப்பு உரிமைகள் மற்றும் பணியிடங்களில் பெண் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு ஆகியவற்றை தொழில் நிறுவனங்கள் உறுதி செய்திட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.பேராசை அல்ல:ராகுல் காந்திதொழிலாளர்களுக்கு ஆதரவாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: நொய்டாவில் ஒரு தொழிலாளி மாதம் ரூ.12,000 ஊதியம் பெறுகிறார்.ஆனால் வீட்டு வாடகையாகவே ரூ.4,000 முதல் ரூ.7,000 வரை செலவிடுகிறார். அவருக்கு ஆண்டுக்கு ரூ.300 ஊதிய உயர்வு கிடைக்கும் போது வீட்டு வாடகையை அதன் உரிமையாளர் ரூ.500 உயர்த்தி விடுகிறார். ஊதியத்தில் எவ்வித உயர்வையும் வழங்காமலேயே, தொழிலாளர்களின் வேலை நேரத்தை ஒரு நாளைக்கு 12 மணி நேரமாக மோடி அரசு நீட்டித்துள்ளது. நொய்டாவைச் சேர்ந்த அந்தத் தொழிலாளி ரூ.20,000 கோருகிறார். இது பேராசை அல்ல ஷ இது அவரது உரிமை; அவரது வாழ்வின் ஒரே அடித்தளம். அரசால் ஒரு சுமையாக சுருக்கப்பட்டுவிட்ட ஒவ்வொரு தொழிலாளிக்கும் நான் துணையாக நிற்பேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



# சங்கரன்கோவிலில் இரட்டை இலைக்கு வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்பு

சங்கரன் கோவில் ஏப். 16-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் திலீபன் ஜெய்சங்கர் அவர்களை ஆதரித்து, இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. கழக எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர்.சங்கரன்கோவில் நகராட்சி நகர் மன்ற துணைத் தலைவர் ரி. கண்ணன்( எ) ராஜீ 8 வது, 15 வது வார்டுகளில்சூறாவளி பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிப்பு. உடன்8 வது வார்டு நகர் மன்ற உறுப்பினர், நகர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு இணைச் செயலாளர், தென்காசி வடக்கு மாவட்ட ஆ . இ. அதிமுக STS. சரவணக்குமார், விசி.8 வார்டுசெயலாளர் கணேசன், மகளிர் அணி நிர்வாகிகள் கூட்டணி கட்சி யினுடைய நிர்வாகிகள் இலக்கிய அணி, மாணவரணி பேச்சாளர்கள், தொண்டர்கள் என 200க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.



■ தென்காசி மாவட்டம் கொடிக்குறிச்சி ஸ்ரீராம் நல்லமணி யாதவா கல்லூரி வாக்கு எண்ணிக்கை மையத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 ஐ முன்னிட்டு 5 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை மையத்தில் மேற்கொண்டு வரும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து பொதுப்பார்வையாளர்கள் நீரஜ்குமார், இ.ஆ.ப., (தென்காசி, கடையநல்லூர்), புவனேஷ் பிரதாப் சிங், (சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர்), மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர்., இ.ஆ.ப., ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.மயில்வாகனன், இ.கா.ப., உள்ளார்



■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார்திருப்பாலை யாதவா கல்லூரியில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்காக நடைபெறும் தேர்தல் பணிகள் குறித்த இரண்டாம் பயிற்சி வகுப்பு நடைபெறுவதை பார்வையிட்டார்.

# தமிழக உள் மாவட்டங்களில் ஏப்.19 வரை அதிகபட்ச வெப்பநிலை 5 டிகிரி வரை உயர வாய்ப்பு

சென்னை, ஏப்.16-

தமிழக உள் மாவட்டங்களில் ஏப்.19ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்பு உள்ளது.



இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்கிழக்கு மத்தியப் பிரதேசம் முதல் மகாராஷ்டிரா, வடக்கு உள் கர்நாடகா, தமிழகம் வழியாக மன்னார் வளைகுடா வரை சுமார் 900 மீட்டர் உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (ஏப்.16) முதல் 21ம் தேதி வரை மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் கடலோர பகுதிகள் மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். தமிழகம், புதுச்சேரியின் மற்ற பகுதிகளில் வறண்ட வானிலை நிலவும்.

தமிழக உள் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் நாளை முதல் 19ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை 82 டிகிரி முதல் 100 டிகிரி ஃபாரன்ஹீட் வரை இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விவசாயம் முதல் கல்வி வரை தவெக ஆட்சியில் மலரும் புதிய விடியல்: பழனி வேட்பாளர் உறுதி

கொடைக்கானல் ஏப்.16-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில், தமிழக வெற்றிக் கழகத்தின் பழனி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் மருத்துவர் பிரதீப் குமார், கடந்த ஒரு வார காலமாகத் கொடைக்கானல் நகர் மட்டுமின்றி, கீழ் மலை மற்றும் மேல்மலை கிராமங்கள் என அனைத்துப் பகுதிகளுக்கும் நேரில் சென்ற மருத்துவர் பிரதீப் குமார், பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். கிளை வாரியாக நூற்றுக்கும் மேற்பட்ட தொண்டர்கள் புடைசூழச் சென்ற அவருக்கு, மலைக்கிராம மக்கள் மலர் தூவி உற்சாகவரவேற்பு அளித்தனர்.*ஆட்சி மாற்றத்திற்கான வாக்குறுதி:*பிரச்சாரத்தின் போது பேசிய மருத்துவர் பிரதீப் குமார், "தமிழக வெற்றிக் கழகம் ஆட்சிக்கு வந்தால் பெண்களுக்கு முழுபாதுகாப்பு உறுதி செய்யப்படும். அரசு வேலைவாய்ப்பு, விவசாயத் துறை மேம்பாடு மற்றும் தரமான கல்வி என அனைத்துத் துறைகளிலும் முன்னெடுப்புகளைச் செய்து, ஒரு சிறப்பான ஆட்சியைத் தலைவர் வழங்குவார்" என முன்மொழிந்தார். தொடர்ந்து டிப்போ, ஏரிச் சாலை, பேருந்து நிலையம் மற்றும் அண்ணா சாலை வழியாக மூஞ்சிக்கல் பகுதிகளில் வீதி வீதியாகச் சென்று வாக்கு சேகரித்தார்.*பங்கேற்ற நிர்வாகிகள்:*இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர் கார்த்திகேயன், கொடைக்கானல் நகரச் செயலாளர் வினோத் குமார், கழக நிர்வாகி அழகு வினோத் மற்றும் நகரக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டு வேட்பாளர் பிரதீப் குமாருக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.





# அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூபாய் 8000 மதிப்புள்ள கூப்பன் வழங்கப்படும்

உடுமலை, ஏப்.16-

உடுமலை சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் மு. ஜெயக்குமார் குடிமங்கலம் மேற்கு, வடக்கு பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். வசவநாயக்கன்பட்டி, கொண்டம்பட்டி, வெள்ள செட்டிபாளையம், ஆகிய பகுதிகளில் தீவிர வாக்கு சேகரித்தார். உடன். குடிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அடிவள்ளி முரளி, புஷ்பராஜ், நித்தியானந்தம், ரவி, ராஜமாணிக்கம், செயற்குழு உறுப்பினர் ஷியாம் பிரசாத் மற்றும் கூட்டணி கட்சிகளுடன் இணைந்து வாக்கு சேகரித்தார்கள்.



■ தென்காசி மாவட்டம் ஆலங்குளம் பழைய பேருந்து நிலையப் பகுதி அருகில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு மாவட்ட நிர்வாகம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வாக்காளர்விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், ஏற்றுக்கொள்ள அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள்.



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் தேமுதிக முன்னாள் ஒன்றிய செயலாளர் சிவசத்தியசீலன் அக்கட்சியில் இருந்து விலகி அதிமுக ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் தலைமையில் சோழவந்தான் தொகுதி அதிமுக வேட்பாளர் மாணிக்கம் | முன்னிலையில் அதிமுகவில் இணைந்தார்..

# ஈரான் போர் பின்னணியில் அமைதியை வலியுறுத்தி அல்ஜீரியாவில் போப் உரை

அல்ஜியர்ஸ், ஏப்.16-

ஈரான் போர் தொடர்பாக அமெரிக்காவில் பிறந்தவரான போப் 15ம் லியோவுக்கும் அமெரிக்க அதிபர் டிரம்புக்கு இடையே கடும் வார்த்தை மோதல் ஏற்பட்டது. தீவிர இடதுசாரிகளுக்கு சேவை செய்வதை நிறுத்த வேண்டுமென போப்பை விமர்சித்த அதிபர் டிரம்ப், ஈரான் அணு ஆயுதம் வைத்திருப்பதை ஆதரிக்கும் போப் தங்களுக்கு தேவையில்லை என்றார். நற்செய்தி புத்தகத்தில் கூறப்பட்டபடியே அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான வேண்டுகோள் விடுப்பதாக கூறிய போப் லியோ, டிரம்பை பார்த்து பயமில்லை என்றார்.இந்நிலையில், தனது 11 நாள் ஆப்ரிக்க சுற்றுப்பயணத்தின் முதல் நாடாக அல்ஜீரியா சென்ற போப் லியோ, அல்ஜியர்சில் தியாகிகள் நினைவிடத்தில் பல்லாயிரம் மக்கள் மத்தியில் உரையாற்றுகையில், ‘‘ஒவ்வொரு தேசத்திற்கும் கடவுள் அமைதியை விரும்புகிறார். அந்த அமைதி என்பது வெறுமனே மோதல்கள் இல்லாத நிலை மட்டுமல்ல.அது நீதி மற்றும் கண்ணியத்தின் வெளிப்பாடாகவும் இருக்க வேண்டும். உலக அளவில் ஏற்படும் புதிய காலனித்துவ போக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இன்று, சர்வதேச சட்டங்களின் தொடர் மீறல்களுக்கும், புதிய காலனித்துவ போக்குகளுக்கும் மத்தியில் உலகளாவிய அதிகார சமநிலை முன்னெப்போதையும் விட அதிக அவசரத் தேவையாக உள்ளது’’ என்றார்

# சேலம் மேற்கு தொகுதியில் சுயேச்சை வேட்பாளர் தீவிர பிரச்சாரம்

சேலம், ஏப்,16-

சேலம் மேற்கு தொகுதியில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடும் ராஜா அவர்கள் அம்பேத்கரின் 135 வது பிறந்த நாளை முன்னிட்டு நிர்வாகிகளுடன் சென்று அம்பேத்கரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். பின்னர் மேற்கு தொகுதிக்கு உட்பட்ட 24, 25, 26 வார்டுகளில் பிரச்சாரத்தை தொடங்கிய அவர், நான் மேற்கு தொகுதியில் சுயேச்சை வேட்பாளராக நிற்கிறேன். தனக்கு பக்கெட் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்தால் தமிழகத்தின் முன்மாதிரி தொகுதியாக மாற்றி காட்டுவேன். நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து உங்களுக்கு உதவுவேன் என்று வாக்கு சேகரித்தார். வழி நெடுங்கிலும் பெண்கள் ஆராத்தி எடுத்து வரவேற்றனர்.





# ஆவடியில் எல்.பி.ஜி தட்டுப்பாடு காரணமாக கேஸ் நிரப்ப நீண்ட வரிசையில் காத்திருந்த ஆட்டோக்கள்!

சென்னை, ஏப்.16-

ஆவடியில் எல்.பி.ஜி தட்டுப்பாடு காரணமாக கேஸ் நிரப்ப நீண்ட வரிசையில் ஆட்டோக்கள் காத்திருக்கின்றன. எல்.பி.ஜி. தட்டுப்பாட்டால் ஆவடியில் ஆட்டோ, கார் ஆகியவற்றுக்கு நிரப்பப்படும் கேஸ் பங்குகள் பல மூடப்பட்டுள்ளன. கேஸ் நிரப்ப ஆவடி மார்க்கெட் முதல் காமராஜர் நகர் வரை சுமார் 1 கி.மீ தூரத்திற்கு மேல் ஆட்டோக்கள் வரிசையில் காத்திருக்கின்றன










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000